முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 157/2021

வாதி தரப்பு சாட்சி.1 சீனிவாசன் திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 06.11.2024 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சீனிவாசன் | கிராமம் | |
| த/பெ / க/பெ. | கிருஷ்ணா ரெட்டியார் | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | 58 |

__குறுக்கு விசாரணை__

1) தாவா 1 மற்றும் 2 அயிட்ட சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். தாவா 3ம் அயிட்ட சொத்தில் உள்ள பாதை எங்களுக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் கேட்டுள்ளேன். எனது தகப்பனார் பெயரில் மேற்படி பாதை உள்ள நிலம் இருப்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். தாவா 3ம் அயிட்ட சொத்து என்ன என்றால் தோட்டம், வீடு, பாதை ஆகியவை உள்ளன. அதன் வீஸ்தீர்ணம் எவ்வளவு என்றால் 5 செண்ட். தாவா 3ம் அயிட்ட சொத்திற்கான நான்கெல்லை என்ன என்றால் எனது இதர நிலத்திற்கு கிழக்கு, மாரியப்பன்,பண்ணடையான் நிலத்திற்கு மேற்கு, சீனிவாசன் நிலத்திற்கு தெற்கு, எனது இதர நிலத்திற்கு வடக்கு ஆகும்.

2) பழனி நிலம் 3ம் அயிட்ட சொத்திற்கு எந்தத் திசையில் உள்ளது என்றால் மேற்படி பாதையானது L வடிவத்தில் உள்ளது. அதில் பழனியின் நிலத்திற்கு வடக்கில் 3ம் அயிட்ட சொத்து உள்ளது. வழக்குரையில் பழனியின் நிலம் வடக்கில் இருப்பதாக சொல்லவில்லை என்றால் சரி தான். எனது வழக்குரையில் 3ம் அயிட்ட சொத்து சர்வே எண்.171 க்கு வடக்கு மற்றும் மேற்கில் இருப்பதாக குறிப்பிட்டுள்ளேன், ஆனால் வா.சா.ஆ.10- புலவரைபடத்தில் சர்வே எண்.171 என்பது இல்லை என்றால் சரிதான். சர்வே எண்.171 என்பது தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. 3ம் அயிட்ட

சொத்தாக காட்டியுள்ள பாதை சர்வே எண்.271 முதல் சர்வே எண்.272 வரை செல்கிறது என்றால் சரிதான்.

3) மேற்படி பாதை கிழமேல் பிரதான சாலையில் இருந்து பகவதி அம்மன் கோவிலில் இருந்து தென்வடலாக சென்று மேற்கிலிருந்து கிழக்காக சங்கப்பிள்ளை நிலம் வரை செல்கிறது என்றால் சரியல்ல. என்னுடைய நிலத்துடன் முடிவடைந்து விடுகிறது. மேற்படி பாதை சர்வே எண்.269-ல் முடிவடைகிறது என்றால் சரிதான். சர்வே எண்.269-ல் எனக்கு இடம் இருப்பதாக ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.269-ல் சுமார் 16 குடும்பங்கள் வசிப்பார்கள் என்றால் சரியல்ல. 6, 7 குடும்பங்கள் வசிக்கிறார்கள். அவர்களுக்கு வேறு பாதை உள்ளது. வேறு பாதை என்பது எந்த சர்வே எண்ணில் செல்கிறது என்று வழக்குரையில் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். அவ்வாறு நான் சொல்லவில்லை என்றும், சர்வே எண்.269 ல் வசிக்கும் நபர்களுக்கு 3 அயிட்ட சொத்தில் உள்ள பாதை வழியாக தான் சென்று வருகிறார்கள் என்றால் சரியல்ல.

4) 3ம் அயிட்ட சொத்தில் உள்ள பாதையை பிரதிவாதிகள் எவ்வளவு வருடங்களாக பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் மேற்படி பாதை எனது நிலத்திற்குள் முடிவடைந்து விடுகிறது. பின் அதன் தொடர்ச்சியாக எனது நிலத்தின் வழியாக சர்வே எண்.269-ல் வசிப்பவர்கள் அவ்வப்போது நடைபாதையாக சென்று வருவார்கள். தற்போது அதில் பாதை போட முயற்சித்ததால் தான் இவ்வழக்கு தாக்கல் செய்தேன். அவ்வாறு சுமார் 10 வருடமாக பயன்படுத்தி வருகிறார்கள். சர்வே எண்.271 லிருந்து சர்வே எண்.272 வரை மேற்படி பாதை கான்கீரிட் சாலையாக போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். சர்வே எண்.272-ன் ஆரம்பத்தில் பாதையின் இரண்டு புறமும் வேறு நபர்களின் வீடுகள் உள்ளன என்றால் ச ரிதான்.

5) சர்வே எண்.272/1 பி க்கு முன்பாகவே சர்வே எண்.272/5 சி, சர்வே எண்.272/9 பி, சர்வே எண்.272/8 ஆகிய நிலங்களின் வழியாக பாதை செல்கிறது என்றால் சரிதான். சர்வே எண்.272/5 சி எனது நிலமாகும். சர்வே எண்.272/5 சி எனது நிலம் என்று வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. தற்போது எனது தகப்பனார் எனது அக்கா பேரனுக்கு எழுதி வைத்துவிட்டார். மேற்படி சர்வே எண்களில் அமைந்துள்ள கான்கீரிட் சாலை வழியாக தான் எனது நிலத்திற்கு செல்கிறேன் என்றால் சரிதான். சர்வே எண்.271 முதல் சர்வே எண்.272 வரை பஞ்சாயத்து சாக்கடை செல்கிறதா என்றால் அது எங்கள் இடத்தில் உள்ளது. மேற்படி

**சாக்கடை பஞ்சாயத்தார் போட்டார்களா என்றால் நாங்கள்தான் போடச்சொல்லி பஞ்சாயத்தார் போட்டார்கள்.**

**வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Principal District Munsif,**
**Kulithalai.**